அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 44 - இஸ்லாம்

### புள்ளியிடும் திட்டம்

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2022 (2023)

## 44 - இஸ்லாம்

## புள்ளியிடும் திட்டம்

பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளில் உள்ள பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

**பகுதி I**

02 வினாக்களுக்கும் - 02 x 20 = 40 புள்ளிகள்

**பகுதி II**

03 வினாக்களுக்கும் - 03 x 20 = 60 புள்ளிகள்

**மொத்தம்**

05 வினாக்களுக்கும் - 40 + 60 = 100 புள்ளிகள்

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..............................................................................
..............................................................................
.............................................................................. ✓ △ $\frac{4}{5}$

(ii) ..............................................................................
..............................................................................
.............................................................................. ✓ △ $\frac{3}{5}$

(iii) ..............................................................................
..............................................................................
.............................................................................. ✓ △ $\frac{3}{5}$

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

## கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

○ ○ ○

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka
සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022 (2023)

ඉස්ලාම් I
இஸ்லாம் I
Islam I

44 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** மிக உயர்ந்ததும் சிறந்ததுமான சுவர்க்கம் என இஸ்லாத்தில் வர்ணிக்கப்படுவது
(1) தாருஸ் ஸலாம் (2) ஜன்னதுந் நஈம் (3) தாருல் ஜலால்
(4) தாருல் கரார் (5) ஜன்னதுல் பிர்தவ்ஸ்

**2.** 'வளப்படுத்தும் பணியில் ஈடுபடல்' என்பதைக் குறிக்கும் அறபுச் சொல்
(1) நுபுவ்வத் (2) இமாரத் (3) இபாதத் (4) கிலாபத் (5) ரிஆஸத்

**3.** பின்வருவனவற்றுள் அல்லாஹ்வின் பண்புகளை விளக்கும் பகுதி
(1) அத்தஸவ்வுப் (2) அத்தாரீ:க்
(3) இல்முல் கலாம் (4) அஸ்மா வஸ்ஸிபாத்
(5) இல்முல் மீராஸ்

**4.** தானிய வகைகளுக்கு ஸக்காத் விதியாகும் நிஸாபின் அளவு
(1) 450 kg (2) 635 kg (3) 740 kg (4) 1030 kg (5) 3025 kg

**5.** பின்வருவனவற்றுள் ஒருவரை நபி என அடையாளப்படுத்தும் பண்புகளுள் ஒன்று
(1) கராமாத் (2) ஜஹாலத் (3) இராதத்
(4) விலாயத் (5) மு:ஜிஸாத்

**6.** அல் - குர்ஆனிற்கு வழங்கப்படும் மற்றொரு பெயர்
(1) அல் - அதர் (2) அல் - கபர் (3) அல் - ஹிக்மா
(4) அல் - புர்கான் (5) அர் - ரிஸாலா

**7.** அபூபக்ர் (ரழி) அவர்களால் அல்-குர்ஆனை ஒரு தொகுப்பாக ஒன்று சேர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர்
(1) உமர் பின் கத்தாப் (ரழி) (2) அலி பின் அபீ தாலிப் (ரழி)
(3) ஹுதைபதுல் யமானி (ரழி) (4) ஸைத் பின் தாபித் (ரழி)
(5) உஸ்மான் பின் அப்பான் (ரழி)

**8.** பின்வருவனவற்றுள் எப்பிராணி தாகித்த போது நீர் புகட்டிய ஒரு மனிதனின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்?
(1) நாய் (2) பூனை (3) ஆடு (4) மாடு (5) ஒட்டகை

9. 'சுவனத்தின் திறவுகோல்' என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட அமல்
(1) தொழுகை (2) ஸகாத் (3) நோன்பு (4) ஹஜ் (5) உம்ரா

10. ஆர்வமூட்டப்படும் வணக்க வழிபாடு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
(1) முபாஹ் (2) பர்ளு (3) பர்ளு கிபாயா (4) நபில் (5) வாஜிப்

11. மறுமையில் அல்லாஹ்வைக் காணமுடியும் என்பதை மறுக்கும் பிரிவினர்
(1) முர்ஜிஆக்கள் (2) மு.்.தஸிலாக்கள் (3) கதரிய்யாக்கள்
(4) கவாரிஜ்கள் (5) ஜபரிய்யாக்கள்

12. மு.்.தஸிலா இயக்கத்தின் ஸ்தாபகரான வாஸில் பின் அதா, இவ்வியக்கத்தைத் தோற்றுவிக்குமுன் பின்பற்றிய இமாமின் பெயர்
(1) இமாம் ஹஸன் இப்னு அலி (ரழி)
(2) இமாம் ஜ.்.பர் ஸாதிக் (ரஹ்)
(3) இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
(4) இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்)
(5) இமாம் அலி இப்னு ஹுஸைன் (ரஹ்)

13. 'ஷரீஆ' என்ற சொல் அல்-குர்ஆனில் எத்தனை தடவை இடம்பெற்றுள்ளது?
(1) 01 (2) 02 (3) 03 (4) 05 (5) 07

14. 'லவ்ஹுல் மஹ்பூழ்' எனும் ஏட்டில் பதியப்பட்டிருந்த அல்-குர்ஆன், பின்னர் முழுமையாக இறக்கப்பட்ட இடம்
(1) பைத்துல் முகத்தஸ் (2) பைத்துல்லாஹ் (3) பைத்துல் இஸ்ஸா
(4) பைத்துல் ம.்.மூர் (5) பைத்துல் லஹ்ம்

15. இஸ்லாம் அறிமுகமான போது அறேபியரிடம் காணப்பட்ட சில வழக்காறுகள் முழுமையாகவும் பகுதியளவிலும் அங்கீகரிக்கப்பட்டன. அவற்றுள் **உள்ளடங்காதது,**
(1) பலதார மணம் (2) கொலைக்கு தியத் வழங்குதல்
(3) க.்.பாவை தவாப் செய்தல் (4) மது அருந்தியவருக்குத் தண்டனை வழங்குதல்
(5) இத்தா அனுஷ்டித்தல்

16. ஓர் இஸ்னாதின் ஆரம்பத்தில் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்ட அறிவிப்பாளர்கள் விடுபட்டிருப்பது
(1) முர்ஸல் எனப்படும். (2) முஅல்லக் எனப்படும்.
(3) முன்கதி.் எனப்படும். (4) மு.்.தல் எனப்படும்.
(5) மர்பூ.் எனப்படும்.

17. ஸஹீஹுல் புகாரி ஹதீஸ் கிரந்தத்தைத் தொகுப்பதற்கு இமாம் புகாரி (ரஹ்) அவர்களைத் தூண்டியவர்
(1) இமாம் இப்னு குஸைமா (ரஹ்)
(2) இமாம் முஹம்மத் இப்னு யஹ்யா (ரஹ்)
(3) இமாம் அலி இப்னு மதீனி (ரஹ்)
(4) இமாம் முஹம்மத் இப்னு நஸ்ர் (ரஹ்)
(5) இமாம் இஸ்ஹாக் இப்னு ராஹுவைஹி (ரஹ்)

18. இலங்கையில் காலனித்துவ காலப்பகுதியில் ஒல்லாந்து அரசினால் நிறுவப்பட்ட வைத்தியசாலை ஒன்றில் பிரதம மருத்துவர்களாக பணியாற்றியவர்களுள் ஒருவர்
(1) ஷேக் மரிக்கார் (2) அபூ உஸ்மான் (3) உதுமான் லெப்பை
(4) ஷேக் ஆலிம் (5) ஷேக் அப்துல் காதர்

19. இஸ்லாமிய வரலாற்றில் ஹதீஸ்களை ஒன்றுதிரட்டுவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டது
(1) நபி (ஸல்) அவர்களது காலப்பகுதியிலாகும்.
(2) அபூபக்ர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலப்பகுதியிலாகும்.
(3) உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலப்பகுதியிலாகும்.
(4) உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் ஆட்சிக் காலப்பகுதியிலாகும்.
(5) உஸ்மான் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலப்பகுதியிலாகும்.

**20.** மகாஸிதுஷ் ஷரீஆவின் நோக்கில் இமாம்களால் வகைப்படுத்தப்பட்டுள்ள அத்தியாவசிய நிலைத் தேவைகளாவன
(1) தீன், உடல், உயிர், பரம்பரை, கல்வி, மானம்
(2) தீன், உயிர், புத்தி, பரம்பரை, மானம், செல்வம்
(3) உடல், உயிர், புத்தி, அந்தஸ்து, தீன், மானம்
(4) சமூகம், உயிர், புத்தி, பரம்பரை, மானம், செல்வம்
(5) மறுமை, தீன், பரம்பரை, புத்தி, உயிர், செல்வாக்கு

**21.** "எந்தவொரு கூட்டுத் தொழுகையிலும் மஃமூம் பாத்திஹா ஸூராவை ஓதக்கூடாது" என்ற கருத்தைக் கூறிய இமாம்
(1) இமாம் ஷாபிஈ (ரஹ்)
(2) இமாம் அஹ்மத் இப்னு முபாரக் (ரஹ்)
(3) இமாம் மாலிக் (ரஹ்)
(4) இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்)
(5) இமாம் அபூ ஹனீபா (ரஹ்)

**22.** ஹஜ் கடமையின் போது சிரியா, துருக்கி வழியாகச் செல்பவர்கள் இஹ்றாம் அணிந்து கொள்ள வேண்டிய மீகாத்
(1) துல்ஹுலைபா (2) அல் - ஜுஹ்பா (3) கர்னுல் மன்ஸில்
(4) யலம்லம் (5) தாத்துல் இராக்

**23.** பின்வருவனவற்றுள் ஹுகூகுல்லாஹ்வில் உள்ளடங்கும் கடமை எது?
(1) மனிதன் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதாகும்
(2) குடும்பத் தலைவன் தனது குடும்பத்துக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதாகும்
(3) அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதாகும்
(4) சமூக நலப் பணிகளில் ஈடுபடுவதாகும்
(5) பொதுப் பாதைகள், கிணறுகள், கல்விக் கூடங்களை அமைப்பதாகும்

**24.** அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினரிடையே ஈமான் கொள்வதற்குரிய பூரணமான முறை
(1) நம்பிக்கை கொண்டு சிந்தனையில் நிலைநிறுத்துவதாகும்.
(2) நாவால் மொழிந்து, அதனைப் பிறருக்கு எத்திவைப்பதாகும்.
(3) நம்பிக்கை கொண்டு, நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுப்பதுமாகும்.
(4) நாவால் மொழிந்து, செயல்களால் வெளிப்படுத்துவதாகும்.
(5) உள்ளத்தால் நம்பி, நாவால் மொழிந்து, செயல்களால் வெளிப்படுத்துவதாகும்.

**25.** ஸகாத் பெறத் தகுதியானோரென அல்-குர்ஆன் குறிப்பிடும் முதல் நான்கு பிரிவினரைச் சுட்டும் சரியான ஒழுங்கினைத் தெரிவுசெய்க
(1) மிஸ்கீன், பகீர், ஆமில், முஅல்லபதுல் குலூப்
(2) ஆமில், பகீர், மிஸ்கீன், முஅல்லபதுல் குலூப்
(3) பகீர், மிஸ்கீன், ஆமில், முஅல்லபதுல் குலூப்
(4) பகீர், ஆமில், மிஸ்கீன், முஅல்லபதுல் குலூப்
(5) முஅல்லபதுல் குலூப், பகீர், மிஸ்கீன், ஆமில்

**26.** நோன்பு நோற்கும் விடயத்தில் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள்
(1) கப்பாராவுடன் நோன்பை விட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
(2) அவர்கள் நோன்பு நோற்பது ஹராமாகும்; பின்னர் நோன்பு நோற்க முடியுமான நிலை ஏற்படுமாயின் அதனைக் கழாச் செய்ய வேண்டும்.
(3) நோன்பை விட்டுவிட அனுமதிக்கப்படவில்லை.
(4) கழாச் செய்தல் என்ற நிபந்தனையுடன் நோன்பை விட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
(5) கப்பாராவுடன் நோன்பைக் கழாச் செய்ய வேண்டும்.

**27.** ஜாஹிலிய்யாக் காலத்தில் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றி அறியாமையிலிருந்து விடுபட்டு வாழ்ந்த ஒரு தரப்பினர்
(1) ஹுகமா (2) ஹுனபா (3) புகஹா (4) ஹுப்பாழ் (5) ஷுஅரா

**28.** பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.

A - செலவு செய்வதிலும் பார்க்க சேமிப்பதில் கவனம் செலுத்துதல்.
B - கொடுக்கல் வாங்கல்களின் போது வட்டி இடம்பெறாது கவனமாயிருத்தல்.
C - மனிதன் தன் சொந்த முயற்சியின் பலனாகவே செல்வத்தைத் திரட்டிக் கொள்வதாக நம்புதல்.
D - தனி நபரின் சொத்துக்களிலிருந்து சமூகத்துக்கும் பங்குகளை வழங்குதல்.
E - இலஞ்சம், சூது போன்ற தடுக்கப்பட்டவற்றிலிருந்து முழுமையாக விலகியிருத்தல்.

மேலுள்ளவற்றுள் இஸ்லாமியப் பொருளாதாரத்தின் நடைமுறைசார்ந்த அடிப்படைகளை உள்ளடக்கிய தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, D, E

**29.** பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.

A - இமாம்கள் மத்ஹப்களைத் தோற்றுவித்தமை
B - மத்ஹப் மீது கொண்ட அளவு கடந்த பற்று
C - முஜ்தஹிதுகளைத் தவிர்த்து முகல்லிதுகள் நீதிபதிப் பொறுப்புக்கு தெரிவுசெய்யப்பட்டமை
D - மத்ஹப் சிந்தனைகள் நூலுருப் பெற்றிருந்தமை
E - மத்ஹபுடைய இமாம்கள் தத்தமது மத்ஹபுகளை முன்னிலைப்படுத்திப் பிரச்சாரம் செய்தமை

மேற்குறிப்பிட்டவற்றுள் ஹி. 4 தொடக்கம் 12 ஆம் நூற்றாண்டு வரை இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டமைக்கான காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, D, E

**30.** பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.

A - கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் பெண் ஒதுக்கப்படுவதும் ஒடுக்கப்படுவதும் நியாயமற்றது எனும் குரலில் உலகில் இஸ்லாம் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது.
B - ஆண், பெண் இருபாலாரும் ஒரே மூலத்திலிருந்து வந்தவர்கள் எனும் வகையில் இறைவனிடத்தில் தம் நற்கருமங்களுக்காக கூலியைப் பெற்றுக்கொள்வதில் சமமானவர்கள் ஆவர்.
C - பெண் தீமையின் பிறப்பிடமென்றோ, ஆண் கெடுவதற்குப் பெண்ணே காரணம் என்றோ இஸ்லாம் கூறுவதில்லை.
D - பெண், ஆணுக்குப் பணிவிடை செய்வதற்காகப் படைக்கப்பட்டுள்ளதோடு, அவளது உழைப்பின் மூலம் பெறும் வருமானத்தை தனது கணவனிடம் ஒப்படைப்பது அவசியமாகும்.
E - சமூக நலப் பணிகளில் பெண் ஈடுபடுவது அவசியமில்லை என்பதை இஸ்லாம் ஏற்றுக்கொள்கிறது.

மேற்குறிப்பிட்டவற்றுள் பால்நிலை சமத்துவம் தொடர்பான இஸ்லாமியக் கருத்துக்களை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, D, E

**31.** பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.

A - சொத்துரிமையாளருக்கும், வாரிசுக்குமிடையில் திருமண உறவு காணப்படல்
B - வாரிசாக உள்ளவர் அடிமையாக இருத்தல்
C - சொத்துடையவர் மரணிக்கும்போது அவரது வாரிசுகள் உயிருடன் காணப்படல்
D - வாரிசு அல்லது சொந்தக்காரர் முஸ்லிம் அல்லாதவராக இருத்தல்
E - சொத்துக்களின் உரிமையாளர் வாரிசு மூலம் கொலை செய்யப்படல்

மேற்குறிப்பிட்டவற்றுள் வாரிசுச் சொத்தை பெற்றுக்கொள்ளத் தடையாக அமையும் காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, C, D (3) A, D, E (4) B, C, D (5) B, D, E

**32.** இஸ்லாமியப் பொருளாதாரம் பற்றிய பின்வரும் கருத்துக்களைக் கவனத்திற் கொள்க.

A - வஹியின் வழிகாட்டலில் கட்டியெழுப்பப்பட்டுள்ளமை
B - ஒழுக்கத்துக்கும் பண்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றமை
C - செல்வச் சுழற்சிக்கு வழிவகுத்து செல்வம் ஒரு சிலரிடம் தேங்கி நிற்பதைத் தடுக்கின்றமை
D - கொடுக்கல் வாங்கலின்போது இலாபத்தை மட்டும் நோக்காக கொண்டு தொழிற்படுகின்றமை
E - தனிமனித நலன், சமூக நலன் ஆகிய இரண்டிற்குமிடையில் சமநிலை பேணுகின்றமை

மேற்குறிப்பிட்டவற்றுள் இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டின் தனிச் சிறப்பை வெளிக்காட்டும் கூற்றுக்களை மாத்திரம் உள்ளடக்கிய விடையினைத் தெரிவுசெய்க

(1) A, B, C, D (2) A, B, C, E (3) A, C, D, E (4) A, B, D, E (5) B, C, D, E

**33.** பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.

A - நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரதான பணிகளில் ஒன்றாக ஆன்மாவைத் தூய்மைப்படுத்தல் அமைந்துள்ளது.

B - அல்லாஹ்வின் ஞாபகத்துடன் வாழ்வதை வலியுறுத்துவதினூடாக அல்-குர்ஆன் ஆன்மீக விருத்திக்கு வழிகாட்டுகின்றது.

C - ஆரம்பகால முஸ்லிம்கள் ஆன்மீக விருத்திக்கு முன்னுரிமையளித்ததோடு, அதனால் கல்வி, வீரம் என்பனவற்றிலும் சிறந்து விளங்கினார்கள்.

D - ஆன்மீகப் பக்குவம் மிகைத்துக் காணப்படும் மனிதன் சமூகத்தில் நன்னடத்தையுடையவனாக விளங்குகின்றான்.

E - உலக வாழ்வைப் புறக்கணிக்கும் மனநிலை கொண்ட மனிதன் மறுமை வாழ்வுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணிக்க முற்படுகின்றான்.

மேற்குறிப்பிட்டவற்றுள் ஆன்மீகத்தின் முக்கியத்துவத்தை மாத்திரம் விளக்கும் தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) A, B, C, D (2) A, B, C, E (3) A, B, D, E (4) A, C, D, E (5) B, C, D, E

**34.** பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.

A - கி.பி. 9, 10 ஆம் நூற்றாண்டுகளில் முஸ்லிம் குடியிருப்புக்கள் இலங்கையின் கரையோரங்களில் அமைந்திருந்ததோடு படிப்படியாக அவை உள்ளக நகரங்களை நோக்கி நகர்ந்தன.

B - கி.பி. 10 - 12 ஆம் நூற்றாண்டுகளில் முஸ்லிம் குடியிருப்புக்கள் கம்பளை, கலகெதர போன்ற உள்ளக நகரங்களில் காணப்பட்டன.

C - கி.பி. 13 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் பக்தாத் வீழ்ச்சியைத் தொடர்ந்து அறபுலகுக்கும் இலங்கை முஸ்லிம்களுக்குமிடையிலான உறவு பாதிப்புக்குள்ளானது.

D - கி.பி. 14 ஆம் நூற்றாண்டளவில் புத்தளம், சிலாபம், இரத்தினபுரி, தெவுந்தர, காலி போன்ற நாட்டின் நகரங்களிலுள்ள கிராமங்கள் பலவற்றில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்தனர்.

E - கி.பி. 16, 17 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதிகளில் போர்த்துக்கேயரின் துன்புறுத்தல் காரணமாக முஸ்லிம்கள் பல்வேறுபட்ட உயிர், பொருள் இழப்புக்களை எதிர்கொண்டனர்.

மேற்குறிப்பிட்டவற்றுள் இலங்கை முஸ்லிம்களின் குடிசன வளர்ச்சி பற்றிய சரியான கருத்துக்களை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, C, E

**35.** பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.

A - பருவமடைந்த, புத்திசுவாதீனமுள்ள ஒருவர் அல்லாஹ்வும் ரசூலும் விதித்த ஒன்றை விடுவதும் தடுத்த ஒன்றைச் செய்வதும் இஸ்லாத்தில் குற்றம் எனப்படுகின்றது.

B - தீமைகளைக் களைந்து சமூக ஒழுங்கையும் நீதியையும் பாதுகாத்தல் இஸ்லாமியத் தண்டனைகளின் பிரதான நோக்கமாகும்.

C - தனிமனித, சமூக உரிமைகளைப் பாதுகாத்து சீரான சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புதல் தண்டனை வழங்குவதின் எதிர்பார்ப்பாகும்.

D - இஸ்லாம் சமூகத்திலிருந்து குற்றச் செயல்களை ஒழிப்பதற்கு தண்டனை வழங்குவதையே பிரதான வழிமுறையாகக் கொள்கின்றது.

E - இஸ்லாத்தில் தண்டனைகள் தீர்மானிக்கப்படும் போது சூழல் கருத்திற் கொள்ளப்படுவதில்லை.

மேற்குறிப்பிட்டவற்றுள் குற்றமும் தண்டனையும் பற்றி இஸ்லாம் குறிப்பிடும் மிகச் சரியான கருத்துக்களை உள்ளடக்கிய விடைத் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, D (3) A, D, E (4) B, C, D (5) B, D, E

**36.** பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.

A - ஸஹாபாக்களில் உள்ளடங்கியிருந்த பிரமுகர்களால் கலீபா தெரிவுசெய்யப்படல்

B - தராதரங்களைக் கருத்திற் கொள்ளாது பெரும்பான்மை அடிப்படையில் கலீபாத் தெரிவு இடம்பெறல்

C - பதவியிலிருக்கும் கலீபா ஒரு குழுவை நியமித்து, அக்குழு அவர்களுள் ஒருவரை ஏகமனதாக கலீபாவாகத் தெரிவுசெய்தல்

D - பரம்பரையை அடிப்படையாகக் கொண்டு கலீபாவைத் தெரிவுசெய்தல்

E - சிரேஷ்ட ஸஹாபாக்களின் ஆலோசனையின் படி ஆட்சியிலுள்ள கலீபா, அடுத்து வரக்கூடிய கலீபாவை நியமனம் செய்தல்

மேற்குறிப்பிட்டவற்றுள் குலபாஉர் ராஷிதூன் கால கலீபாத் தெரிவுமுறைகளை மாத்திரம் உள்ளடக்கிய விடைத்தொகுதி

(1) A, B, C (2) A, C, D (3) A, C, E (4) B, C, D (5) C, D, E

● **37** முதல் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் **X, Y** எனும் நிரல்களின் கீழ் தரப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் ஒருவகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை ஆனால் அவை ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அதன்படி **X** நிரலில் உள்ளவற்றை **Y** நிரலில் உள்ளவற்றுடன் தொடர்புபடுத்தும்போது பொருத்தமாக அமையும் சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

**37.**

| | X | Y |
|---|---|---|
| (i) | பொறாமை | A - அல்லாஹ்வுக்குரிய போர்வை; மனிதனுக்குரியதல்ல |
| (ii) | அகம்பாவம் | B - மனிதன் செய்யும் நற்செயல்களை வீணாக்கி விடக்கூடியது |
| (iii) | கோள் | C - இறைவன் வழங்கியிருப்பதைக் கொண்டு திருப்தியடையாத நிலை |
| (iv) | பேராசை | D - பரிகாசத்துக்கேனும் பயன்படுத்தக்கூடாது என வலியுறுத்தப்பட்ட ஒன்று |
| (v) | பொய் | E - சகோதரத்துவப் பிணைப்பை முறித்துவிடக்கூடியது |

(1) A, B, C, D, E    (2) A, C, D, E, B    (3) B, A, E, C, D
(4) B, C, D, E, A    (5) C, D, E, A, B

**38.**

| | X | Y |
|---|---|---|
| (i) | நூஹ் (அலை) | A - இரும்புருக்கு |
| (ii) | ஸகரிய்யா (அலை) | B - கால் நடை மேய்ப்பு |
| (iii) | தாவூத் (அலை) | C - தச்சுத்தொழில் |
| (iv) | முஹம்மத் நபி (ஸல்) | D - கப்பல் கட்டுதல் |

(1) A, B, C, D    (2) A, C, D, B    (3) B, A, C, D    (4) C, D, B, A    (5) D, C, A, B

**39.**

| | X | Y |
|---|---|---|
| (i) | முஷாரகா | A - ஒரு தரப்பினரின் மூலதனத்தையும் மற்றொரு தரப்பினரின் உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டு இலாபத்தில் பங்குகொள்ளும் வர்த்தக முயற்சி |
| (ii) | முஸாரஆ | B - பலர் ஒன்றிணைந்து தமது மூலதனத்தை ஓர் உற்பத்தியில் முதலிட்டு பங்குதாரர்களாக செயற்படல் |
| (iii) | முராபஹா | C - தனக்குச் சொந்தமான நிலத்தை இன்னொரு உழைப்பாளரோடு இணைந்து உற்பத்திக்குப் பயன்படுத்துதல் |
| (iv) | முழாரபா | D - கொள்வனவு விலை, எதிர்பார்க்கப்படும் இலாபம் என்பவை முன்கூட்டி வெளிப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படும் வர்த்தகம் |

(1) A, B, C, D    (2) A, C, B, D    (3) B, C, D, A    (4) B, D, C, A    (5) D, C, B, A

**40.** பின்வரும் அட்டவணையில் நபி (ஸல்) அவர்களது கால வரலாற்றுடன் தொடர்புபட்ட பதங்களை உள்ளடக்கிய விடைத் தொகுதி யாது?

| | | |
|---|---|---|
| A - அமீருல் மு'மினீன் | B - கிலாபத் | C - நஜ்ஜாஷி |
| D - தீவானுல் பரீத் | E - மஜ்லிஸுஷ் ஷூரா | F - முஹாஜிர்கள் |
| G - அன்ஸாரிகள் | H - ஹஜ்ஜதுல் விதா | I - பைஅதுல் அகபா |

(1) A, B, C, D, E   (2) B, C, D, E, F   (3) C, F, G, H, I   (4) D, E, F, G, H   (5) E, F, G, H, I

**41.** பின்வருவனவற்றுள் 'சிறிய வகை நிபாக்' இற்குப் பொருத்தமான உதாரணம் யாது?
(1) சிலர் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஈமான் கொண்டு செயற்படுகிறார்கள் என்பதற்காக அவர்களைப் பரிகசித்தல்
(2) இஸ்லாமிய மார்க்கத்தின் வெற்றியை நினைத்து வெறுப்படைதல்
(3) வணக்க வழிபாடுகளில் அதிக ஆர்வமுடையவராக தன்னைக் காண்பித்து அவற்றில் ஈடுபடாதிருத்தல்
(4) முஹம்மத் (ஸல்) அவர்களை அல்லது அவரது ரிஸாலத்தின் ஒரு பகுதியை நிராகரித்தல்
(5) அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் தீர்ப்புக்களைப் புறக்கணித்தல்

**42.** தன்னை ஒரு ஆளுநராக நியமிக்கக் கோரியபோது, நபியவர்கள் அப்பொறுப்பை சுமப்பதிலுள்ள சிரமங்களை எடுத்துக் கூறினார்கள். இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஸஹாபி
(1) முஆத் இப்னு ஜபல் (ரழி)    (2) முஆவியா (ரழி)    (3) அபூதர் (ரழி)
(4) உத்மான் (ரழி)    (5) முஸ்அப் இப்னு உமைர் (ரழி)

**43.** பின்வருவனவற்றுள் சமய, சமூக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தடையாகவுள்ள கூற்று
(1) உலகில் வித்தியாசமான மதங்கள், கொள்கைகள், கோட்பாடுகள் காணப்படுகின்றமை பிரபஞ்ச நியதியாகும்.
(2) மக்காவில் குறைஷியர் முஸ்லிம்களுக்கு இழைத்த கொடுமைகளுக்காக மதீனாவில் அவர்கள் பழிதீர்த்துக் கொண்டனர்.
(3) பல்லின நாடுகளில் பிற சமயங்களையும் கற்க வழியமைப்பது காலத்தின் தேவையாகும்.
(4) மனிதர்களுக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள வித்தியாசம் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் புரிந்து கொள்வதற்காகும்.
(5) இஸ்லாத்தின் போதனைகள் சகவாழ்வையும், சமாதானத்தையும் வலியுறுத்துகின்றன.

**44.** கடவுள் பற்றிய கருத்துக்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் ஏற்ப நாத்திகவாதிகள் மூவகைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள்
(1) முல்ஹிதூன், நஸ்ரானியா, முனாபிகூன் ஆவர்.
(2) ருபூபிய்யூன், லாஅத்ரியா, ஜஹ்மியா ஆவர்.
(3) முல்ஹிதூன், லாஅத்ரியா, ருபூபிய்யூன் ஆவர்.
(4) லாஅத்ரியா, முல்ஹிதூன், முனாபிகூன் ஆவர்.
(5) ருபூபிய்யூன், முனாபிகூன், ஜஹ்மியா ஆவர்.

**45.** வாரிசுரிமை பற்றிய இஸ்லாமியக் கோட்பாட்டில் வாரிசுகளின் வகைகள் பற்றிய **பிழையான** கூற்றினைத் தெரிவுசெய்க
(1) தாய், தந்தை, கணவன், மனைவி, மகள் ஆகியோரும் அஸ்ஹாபுல் புருள் வகையில் உள்ளடங்குவோராவர்.
(2) அஸ்ஹாபுல் புருள் பிரிவினரின் பங்குகள் போக எஞ்சியவற்றைப் பெறுவோராக அஸபாக்கள் காணப்படுகின்றனர்.
(3) அஸபாவுக்கு அடுத்த நிலையிலுள்ள குடும்ப உறவினர்கள் தவில் அர்ஹாம் என அழைக்கப்படுகின்றனர்.
(4) சம தரத்திலுள்ள ஆணும் பெண்ணும் அஸபாவாகப் பங்கு பெறுவதனை பிறர் மூலம் அஸபாவாக்கப்படுவோர் என அழைக்கப்படுவர்.
(5) தந்தை, தந்தையின் தந்தை, மகன், மகனின் மகன் ஆகியோர் ஒரே நேரத்தில் மரணித்தவரின் சொத்துக்கு அஸபாவாக இருப்பர்.

● **46** தொடக்கம் **50** வரையிலான வினாக்களில் இரண்டு வகையிலான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக்கூற்றுக்களுக்கு பின்வரும் (1), (2), (3), (4), (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| இல. | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | திருமணப் பேச்சுவார்த்தை, மணப் பொருத்தம் பார்த்தல் என்பன மணமுறிவு ஏற்படாதிருக்க இஸ்லாம் காட்டும் வழிமுறைகளாகும். | மணவாழ்வு சீராக அமைவதற்கு தடைகள் ஏற்படும் போது திருமண பந்தத்திலிருந்து விலகிக் கொள்வதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கியுள்ளது. |
| **47.** | இரண்டு தலாக் சொல்லப்பட்ட நிலையில் இத்தா காலம் முடிவடைவதற்குள் தம்பதிகள் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்கு அனுமதிக்கப்படுவர். | ஒரு பெண் கர்ப்பிணியாக இருக்கும் காலத்தில் தலாக் சொல்லப்படுதல் சுன்னத்தான வழிமுறையாகும். |
| **48.** | ஒரு பெண் நறுமணம் பூசி ஆண்களைக் கவரும் வகையில் பொது இடங்களுக்குச் செல்வதை இஸ்லாம் அனுமதித்துள்ளது. | முஸ்லிமான ஆண்கள் வெள்ளியிலான ஒரு வளையலை அணிந்துகொள்வதைத் தவிர வேறு எந்த அணிகலன்களும் இஸ்லாத்தில் அனுமதிக்கப்படவில்லை. |
| **49.** | ஒரு முஸ்லிமின் வீடு விசாலமானதாக அமைந்திருப்பதை இஸ்லாம் அனுமதித்துள்ளதோடு அது நேர்த்தியானதாக இருப்பதையும் விரும்புகின்றது. | இஸ்லாமிய உணர்வும் நற்செயற்பாடுகளும் கொண்ட குடும்ப அங்கத்தவர்கள் குறித்த ஒரு வீட்டில் வாழுதல் வீட்டின் அழகையும் நேர்த்தியையும் வெளிக்காட்ட உதவுகின்றது. |
| **50.** | ஒரு பெண் இத்தா அனுஷ்டித்துக் கொண்டிருக்கும் நிலையில் திருமண பந்தத்தில் இணைந்து கொள்வது விரும்பத்தக்கதாகும். | வலி அல்லது பொறுப்புதாரர் ஒழுங்கில் உள்ளவர்கள் எவரும் இல்லாத போது ஒரு பெண்ணுக்கு காழி நிபந்தனைகளுடன் வலியாக செயற்படுவார். |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

විෂය අංකය / பாட இலக்கம்: **44**

විෂයය / பாடம்: **இஸ்லாம்**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 2,4 | 21. | 5 | 31. | 5 | 41. | 3 |
| 02. | 2 | 12. | 4 | 22. | 2 | 32. | 2 | 42. | 3 |
| 03. | 4 | 13. | 1 | 23. | 3 | 33. | 1 | 43. | 2 |
| 04. | 2 | 14. | 3 | 24. | 5 | 34. | 2, 3 | 44. | 3 |
| 05. | 5 | 15. | 4 | 25. | 3 | 35. | 1 | 45. | 5 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 4 | 36. | 3 | 46. | 1 |
| 07. | 4 | 17. | 5 | 27. | 2 | 37. | 3 | 47. | 3 |
| 08. | 1 | 18. | 1 | 28. | 5 | 38. | 5 | 48. | 4 |
| 09. | 1 | 19. | 4 | 29. | 4 | 39. | 3 | 49. | 5 |
| 10. | 4 | 20. | 2 | 30. | 1 | 40. | 3 | 50. | 2 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கை பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

**44 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) இஸ்லாமியப் பரிபாஷையில் நுபுவ்வத் என்றால் என்ன? (02 புள்ளிகள்)
   (ii) மஹுப்பதுர் ரஸுலை தெளிவுபடுத்தும் **இரண்டு** ஆதாரங்கள் தருக. (04 புள்ளிகள்)
   (iii) இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டில் மலக்குகளின் பண்புகள் பற்றிய ஆறு விடயங்களைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) மறுமையில் இடம்பெறவுள்ள ஏதாவது **நான்கு** நிகழ்வுகளை அடையாளப்படுத்தி விபரிக்குக. (08 புள்ளிகள்)

2. (i) இபாதத் **இரு** வகைகளாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. அவை யாவை? (02 புள்ளிகள்)
   (ii) தொழுகையின் முக்கியத்துவத்தை விளக்கும் அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னா ஆதாரங்கள் **இவ்விரண்டு** வீதம் தருக. (04 புள்ளிகள்)
   (iii) ஹஜ் கடமையின் சமூகம் சார்ந்த இலக்குகள் **மூன்றை** விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) தொழுகையின் இலௌகீகப் பயன்கள் **நான்கினைச்** சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

3. (i) தனி நபர்களின் சமூக உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் உமர் (ரழி) அவர்கள் கையாண்ட வழிமுறைகளுக்கு **ஓர்** உதாரணம் தருக. (02 புள்ளிகள்)
   (ii) ஸதகாவின் சிறப்புக்கள் **இரண்டை** அல்-குர்ஆன் ஆதாரங்களோடு விபரிக்குக. (04 புள்ளிகள்)
   (iii) வறுமை ஒழிப்பில் ஸகாத்தின் வகிபங்கை தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)
   (iv) இலங்கை வாழ் முஸ்லிம்கள் தமது தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆற்றவேண்டிய பங்களிப்புக்களை விரிவாக ஆராய்க. (08 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (i) மக்கீ, மதனீ சூறாக்களுக்கிடையிலான வேறுபாடுகளை விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) அஸ்பாபுந் நுஸூல் என்பதனைத் தெளிவுபடுத்தி, அதன் பயன்கள் **நான்கை** விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** (i) குடும்ப வாழ்வில் கணவன், மனைவி பரஸ்பரம் ஆற்ற வேண்டிய கடமைகளைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ii) இஸ்லாம் அங்கீகரித்த உணவு வகைகளை உட்கொள்வதால் ஏற்படும் பயன்களை தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

**6.** (i) மு.்.தஸிலாக்களின் **ஐந்து** அடிப்படை நம்பிக்கைகளையும் விரிவாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) ஷீஆக்கள் பற்றிக் குறிப்பிட்டு, அவர்களின் உட்பிரிவுகளில் இஸ்னா அஷரிய்யா, ஸைதிய்யா பற்றித் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

**7.** (i) இஸ்லாம் அறிமுகமாவதற்கு முன்னர் இலங்கையருடன் அறேபியர் கொண்டிருந்த தொடர்புகளைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ii) இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைக் கூறும் வரலாற்று ஆய்வாளர்கள் **ஐவரைக்** குறிப்பிட்டு, அவர்களுள் **இருவரின்** கருத்துக்களைத் தொகுத்து விபரிக்குக. (10 புள்ளிகள்)

**8.** பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) உஸூலுல் ஹதீஸ் (05 புள்ளிகள்)

(ii) மகாஸிதுஷ் ஷரீஆவில் ஹாஜிய்யாத் (05 புள்ளிகள்)

(iii) பிக்ஹ் கலையின் மீள் எழுச்சிக் காலம் (05 புள்ளிகள்)

(iv) நபி (ஸல்) காலத்தில் ஸஹாபாக்களிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடுகளும் புரிந்துணர்வும் (05 புள்ளிகள்)

***

## பகுதி (I)

1. (i) இஸ்லாமியப் பரிபாஷையில் நுபுவ்வத் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

(ii) மஹப்பதுர் ரஸூலை தெளிவுபடுத்தும் இரண்டு ஆதாரணங்கள் தருக? (4 புள்ளிகள்)

(iii) இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டில் மலக்குகளின் பண்புகள் பற்றிய ஆறு விடயங்களைச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) மறுமையில் இடம்பெறவுள்ள ஏதாவது நான்கு நிகழ்வுகளை அடையாளப்படுத்தி விபரிக்குக. (8 புள்ளிகள்)

i. - நுபுவ்வத் என்பது நபித்துவத்தைக் குறிக்கும். அல்லாஹ் தனது அடியார்களுள் ஒருவருக்கு நேரடியாகவோ அல்லது ஒரு மலக்கின் ஊடாகவோ செய்திப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கான தகுதியை வழங்கி அவரைத் தேர்ந்தெடுப்பதைக் குறிக்கும்.

( மொழிக்கருத்தை மாத்திரம் குறிப்பிடப்பட்டிருப்பின் ஒரு புள்ளி வழங்கப்படும்)

ii. - "முஃமின்களுக்கு அவர்களது உயிரை விட நபிதான் மேலானவர்" (33:06)

- "தனது பிள்ளையை விடவும், பெற்றோரை விடவும், மற்றெல்லா மனிதர்களை விடவும் நான் உங்களுக்கு அன்புக்குரியவராக மாறாத வரை, உங்களில் எவரும் (பூரண) ஈமான் கொண்டவராக ஆக முடியாது" (புஹாரி)
- உமர் (றழி) நபியவர்களிடம் "அல்லாஹ்வின் தூதரே! நிச்சயமாக எனது உயிருக்கு அடுத்து ஏனைய அனைத்தையும் விட, நீங்கள் தான் எனக்குப் பிரியமானவர்" என்றார்கள். இதைக்கேட்ட நபி (ஸல்) அவர்கள், "எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அந்த அல்லாஹ்வின் மீது சத்தியமாக உமது உயிரைவிட நான் உமக்கு அன்புக்குரியவனாக மாறவேண்டும்" என்றார்கள். அதன் பின்னர், "அல்லாஹ்வின் மீது ஆணையாக நிச்சயமாக எனது உயிரைவிட நீங்கள் நேசத்திற்கு உரியவர்கள்" என்று உமர் (றழி) அவர்கள் அழுத்தமாகச் சொன்னார்கள். அப்பொழுது, "உமரே! இப்பொழுதுதான் உமது ஈமான் பூரணத்துவம் பெறுகிறது" என்றார்கள். (புஹாரி)
- ஸைத் பின் தஸினாவின் நிகழ்வு.

(இவைபோன்ற 2 ஆதாரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 2 x 2 = 4 புள்ளிகள்)

iii. பண்புகள்:

- மலக்குகள் ஒளியால் படைக்கப்பட்டவர்கள்
- அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருத்தல்,
- அவனது அர்ஷை சுமத்தல்,
- சுவனவாசிகளுக்கு சோபனம் கூறுதல்,
- நரக வாசிகளைத் தண்டித்தல்,
- வஹியைக் கொண்டு வருதல்,
- இயற்கை நிகழ்வுகளுக்குப் பொறுப்பாய் இருத்தல்,
- முஃ மின்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தித்தல்,
- அவர்களது தூய ஆன்மிக செயற்பாடுகளில் கலந்து கொள்ளல்,
- மனிதர்களின் செயல்களைப் பதிவு செய்தல்,
- முஃமின்களுக்கு உதவி செய்து அவர்களை உறுதிப்படுத்தல்

- உயிரைக் கைப்பற்றல் போன்ற பணிகள் மலக்குகளுக்குப் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளன.
- "எதிலும் அவர்கள் மாறு செய்ய மாட்டார்கள் தாங்கள் ஏவப்பட்டபடியே அவர்கள் செய்து வருவார்கள்". (அத்தஹ்ரீம் : 06)
- ஆற்றல்களுக்கேற்ப வித்தியாசமான எண்ணிக்கைகளில் இறக்கைகளை கொண்டவர்கள். "இரண்டிரண்டும், மும்மூன்றும், நன்னான்கும் இறக்கை உள்ளவர்களாக மலக்குகளைத் தன் தூதை எடுத்துச் செல்வோராக ஆக்கினான்" (பாதிர்:1)
- அவர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றமை.

(இவைபோன்ற ஆறு பண்புகள் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்கியிருப்பின் 6 x 1 = 6 புள்ளிகள்)

iv.
- ஆலமுல் பர்ஸக்
- பஃஸ்
- மஹ்ஷர்
- ஷபாஅத்
- ஹிஸாப்
- மீஸான்
- ஹவ்லுல் கவ்ஸர்
- ஸிராத்
- சுவனம்
- நரகம்

(மேலுள்ளவற்றுள் எவையேனும் நான்கு நிகழ்வுகள் விபரிக்கப்பட்டிருப்பின் 4 x 2 = 8 புள்ளிகள்)

2. (i) இபாதத் இரு வகைகளாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. அவை யாவை? (2 புள்ளிகள்)
(ii) தொழுகையின் முக்கியத்துவத்தை விளக்கும் அல் - குர்ஆண், அஸ் - ஸுன்னா ஆதாரங்கள் இவ்விரண்டு வீதம் தருக? (4 புள்ளிகள்)
(iii) ஹஜ் கடமையின் சமூகம் சார்ந்த இலக்குகள் மூன்றை விளக்குக. (6 புள்ளிகள்)
(iv) தொழுகையின் இலௌகீகப் பயன்கள் நான்கினைச் சுருக்கமாக விபரிக்குக. (8 புள்ளிகள்)

i. 1. அடிப்படை வணக்கங்கள் :

உதாரணம் - தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ்

2. அன்றாட நடவடிக்கைகளுக்கு உட்படுகின்ற செயற்பாடுகள்.

உதாரணம் - உழைத்தல், உண்ணல், பருகல், உறங்கல், குடும்பத்தினரை நேசிப்பதும் உதவுவதும், அயலார் அநாதைகள், ஏழைகள், ஜீவராசிகள் மீது இரக்கம் காட்டுதல்.

(இரண்டு வகை இபாதத்துக்களையும் குறிப்பிட்டிருப்பின் 2 x 1 = 2 புள்ளிகள்)

ii. - "தொழுகைகளை (குறிப்பாக) நடுத்தொழுகையை பேணிக் கொள்ளுங்கள் ( தொழுகையின்போது ) அல்லாஹ்வின் முன்னிலையில் உள்ளச்சப்பாட்டுடன் நில்லுங்கள்". (2 : 238)
- "இன்னும் தொழுகையை நிலை நிறுத்துவீராக நிச்சயமாக தொழுகை ( மனிதரை ) மானக்கேடானவற்றையும் தீமையையும் விட்டு விலக்கும்". (29 : 45)
- "உங்களை ஸகர் ( நரகத்தில் ) நுழைய வைத்தது எது?" (என்று கேட்பார்கள்.) அவர்கள் ( பதில் ) கூறுவார்கள்: "தொழுபவர்களில் நின்றும் நாங்கள் இருக்கவில்லை". (74 : 40 - 43)
- "முஸ்லிமுக்கும் காபிருக்கும் இடையிலான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்" (முஸ்லிம்)
- "மறுமை நாளில் அடியான் தொழுகையைப் பற்றியே முதலில் விசாரிக்கப்படுவான். அது சீராகிவிட்டால் அவனது ஏனைய அமல்களும் சீராகிவிடும். அது பழுதாகி விட்டால் ஏனைய அமல்களும் பழுதாகிவிடும்" (தபரானி)

(இவை போன்ற அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னா ஆதாரங்கள் இவ்விரண்டு குறிப்பிடப்பட்டிருப்பின் 2 x 2 = 4 புள்ளிகள்)

iii. - உடற் சுத்தம் பேணுதல்
- பெரும் பாவம், வீண் வார்த்தைகளிலிருந்து தவிர்ந்திருக்கச் செய்தல்
- அடுத்தவர்களை மதித்து நடத்தல்
- ஒழுங்கு பேணுதல், நேரத்திற்கு இயங்கச் செய்தல்
- முஸ்லிமினது உயிர், மானம், செல்வம் என்பவற்றுக்கான பாதுகாப்பு உத்தரவாதம்
- முஸ்லிம் உம்மத்தின் ஒருமைப்பாடு வலியுறுத்தப்படல்
- இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படைகளோடு (மக்கா, மதீனா) நெருக்கத்தை ஏற்படுத்தல்
- ஆன்மீக, லௌகீக பயன்பாடுகளை அடைந்து கொள்ளச் செய்தல்.

(இவை போன்ற மூன்று இலக்குகள் விளக்கப்பட்டிருப்பின் 3 x 2 = 6 புள்ளிகள்)

IV. - உளப்பரிசுத்தத்திற்கு வழிவகுக்கின்றது.

- தொழுகை மானக்கேடான, பாவமான காரியங்களிலிருந்தும் பாதுகாக்கின்றது. "நிச்சயமாக தொழுகை ( மனிதரை ) மானக்கேடானவற்றையும் தீமையையும் விட்டு விலக்கும்". (29:45)
- தொழுகை உடல் சுத்தத்தை பேணவும் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் வழிவகுக்கிறது.
- வாழ்க்கையில் நேர முகாமைத்துவம் பேணுவதற்கும், ("நம்பிக்கை கொண்டோர் மீது தொழுகை நேரம் குறிக்கப்பட்ட கடமையாகவுள்ளது. (4:103)
- சேர்ந்து வாழ்வதற்கும் அதனூடாக பரஸ்பரம் புரிந்து, உதவி வாழ்வதற்கும் வழி வகுக்கின்றது.
- தலைமைத்துவப் பயிற்சி, தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படல் என்பன வளரக்கப்படுகின்றன.
- இறை நினைவு ஏற்படுவதால் உள அமைதி கிடைக்கின்றது.

(இவை போன்ற நான்கு விடயங்கள் சுருக்கமாக விபரிக்கப்பட்டிருப்பின் 4 x 2 = 8 புள்ளிகள்)

3. (i) இபாதத் இரு வகைகளாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. அவை யாவை? (2 புள்ளிகள்)

(ii) தொழுகையின் முக்கியத்துவத்தை விளக்கும் அல் - குர்ஆண், அஸ் - ஸுன்னா ஆதாரங்கள் இவ்விரண்டு வீதம் தருக? (4 புள்ளிகள்)

(iii) ஹஜ் கடமையின் சமூகம் சார்ந்த இலக்குகள் மூன்றை விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) தொழுகையின் இலௌகீகப் பயன்கள் நான்கினைச் சுருக்கமாக விபரிக்குக. (8 புள்ளிகள்)

i. 1. அடிப்படை வணக்கங்கள் :

உதாரணம் – தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ்

2. அன்றாட நடவடிக்கைகளுக்கு உட்படுகின்ற செயற்பாடுகள்.

உதாரணம் – உழைத்தல், உண்ணல், பருகல், உறங்கல், குடும்பத்தினரை நேசிப்பதும் உதவுவதும், அயலார் அநாதைகள், ஏழைகள், ஜீவராசிகள் மீது இரக்கம் காட்டுதல்.

(இரண்டு வகை இபாதத்துக்களையும் குறிப்பிட்டிருப்பின் 2 x 1 = 2 புள்ளிகள்)

ii. - “தொழுகைகளை (குறிப்பாக) நடுத்தொழுகையை பேணிக் கொள்ளுங்கள் ( தொழுகையின்போது ) அல்லாஹ்வின் முன்னிலையில் உள்ளச்சப்பாட்டுடன் நில்லுங்கள்”. (2 : 238)

- “இன்னும் தொழுகையை நிலை நிறுத்துவீராக நிச்சயமாக தொழுகை ( மனிதரை ) மானக்கேடானவற்றையும் தீமையையும் விட்டு விலக்கும்”. (29 : 45)

- “உங்களை ஸகர் ( நரகத்தில் ) நுழைய வைத்தது எது?” (என்று கேட்பார்கள்.) அவர்கள் ( பதில் ) கூறுவார்கள்: “தொழுபவர்களில் நின்றும் நாங்கள் இருக்கவில்லை”. (74 : 40 - 43)

- “முஸ்லிமுக்கும் காபிருக்கும் இடையிலான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்” (முஸ்லிம்)

- “மறுமை நாளில் அடியான் தொழுகையைப் பற்றியே முதலில் விசாரிக்கப்படுவான். அது சீராகிவிட்டால் அவனது ஏனைய அமல்களும் சீராகிவிடும். அது பழுதாகி விட்டால் ஏனைய அமல்களும் பழுதாகிவிடும்” (தபுரானி)

(இவை போன்ற அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னா ஆதாரங்கள் இவ்விரண்டு குறிப்பிடப்பட்டிருப்பின் 2 x 2 = 4 புள்ளிகள்)

iii. - உடற் சுத்தம் பேணுதல்

- பெரும் பாவம், வீண் வார்த்தைகளிலிருந்து தவிர்ந்திருக்கச் செய்தல்
- அடுத்தவர்களை மதித்து நடத்தல்
- ஒழுங்கு பேணுதல், நேரத்திற்கு இயங்கச் செய்தல்
- முஸ்லிமினது உயிர், மானம், செல்வம் என்பவற்றுக்கான பாதுகாப்பு உத்தரவாதம்
- முஸ்லிம் உம்மத்தின் ஒருமைப்பாடு வலியுறுத்தப்படல்
- இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படைகளோடு (மக்கா, மதீனா) நெருக்கத்தை ஏற்படுத்தல்
- ஆன்மீக, லௌகீக பயன்பாடுகளை அடைந்து கொள்ளச் செய்தல்.

(இவை போன்ற மூன்று இலக்குகள் விளக்கப்பட்டிருப்பின் 3 x 2 = 6 புள்ளிகள்)

iv. - உளப்பரிசுத்தத்திற்கு வழிவகுக்கின்றது.

- தொழுகை மானக்கேடான, பாவமான காரியங்களிலிருந்தும் பாதுகாக்கின்றது. "நிச்சயமாக தொழுகை ( மனிதரை ) மானக்கேடானவற்றையும் தீமையையும் விட்டு விலக்கும்". (29:45)
- தொழுகை உடல் சுத்தத்தை பேணவும் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் வழிவகுக்கிறது.
- வாழ்க்கையில் நேர முகாமைத்துவம் பேணுவதற்கும், ("நம்பிக்கை கொண்டோர் மீது தொழுகை நேரம் குறிக்கப்பட்ட கடமையாகவுள்ளது. (4:103)
- சேர்ந்து வாழ்வதற்கும் அதனூடாக பரஸ்பரம் புரிந்து, உதவி வாழ்வதற்கும் வழி வகுக்கின்றது.
- தலைமைத்துவப் பயிற்சி, தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படல் என்பன வளரக்கப்படுகின்றன.
- இறை நினைவு ஏற்படுவதால் உள அமைதி கிடைக்கின்றது.

(இவை போன்ற நான்கு விடயங்கள் சுருக்கமாக விபரிக்கப்பட்டிருப்பின் 4 x 2 = 8 புள்ளிகள்)

4. (i) மக்கீ, மதனீ சூறாக்களுக்கிடையிலான வேறுபாட்டை விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) அஸ்பாபுத் நுஸூல் என்பதனைத் தெளிவுபடுத்தி, அதன் பயன்கள் நான்கை விளக்குக. (10 புள்ளிகள்)

i.

| மக்னீ | மதனீ வசனம் |
|---|---|
| மக்கீ என்ற சொல் மக்காவை சார்ந்தது | மதனீ என்ற சொல் மதீனாவை சார்ந்தது |
| ஹிஜ்ரத்துக்கு முன் இறங்கியது | ஹிஜ்ரத்துக்கு பின் இறங்கியது |
| ஓசைநயம், எதுகை மோனை கொண்டவை | இது குறைவு |
| மனிதர்களே! என பெரும்பாலும் ஆரம்பமாகும் | விசுவாசிகளே! என பெரும்பாலும் விழிக்கும் |
| 'கில்லா' என்ற சொல் அதிகமாக பிரயோகிக்கப்படல் | இது இருக்காது |
| வசனக் கவர்ச்சி, சிறிய ஆயத்து | நீண்ட அத்தியாயம், நீண்ட வசனங்கள் |
| அதிக சத்தியம் காணப்படல் | மிகக் குறைவு |
| ஹுரூபுல் முகத்தஆத் இடம்பெறல் இது மிகக் குறைவு | இது மிகக் குறைவு |
| ஸஜதா திலாவத் இடம்பெறல் | இது இல்லை |
| அகீதா, அக்லாக் பற்றி குறிப்பிடல் | இபாதா, முஆமலாத் பற்றி குறிப்பிடப்படல் |
| முனாபிக்கின் பண்புகள் பற்றி குறிப்பிடவில்லை | முனாபிக்கின் பண்புகள் பற்றி குறிப்பிடல் |

இவை போன்ற ஐந்தைந்து கருத்துக்களை வேறுபடுத்தி விபரித்திருப்பின் (5 x 2 = 10 புள்ளிகள்)

ii. - மொழியில் : ஸபபுன் என்பதன் பன்மை அஸ்பாபுன். கருத்து : காரணங்கள்.

- இஸ்லாமிய வழக்கில் : அல்குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டதற்கான பின்னணிக் காரணங்களை விபரிக்கின்ற ஒரு அல்குர்ஆனியக் கலையாகும்.
- எல்லா வசனங்களுக்கும் ஸபபுந்நுஸூல் இல்லை.

ஸபபுந் நுஸூலின் பயன்கள்

- அல்குர்ஆன் வசனம் கூறவரும் மேலோட்டமான கருத்துக்களை மட்டும் நோக்காது அதன் ஆழமான கருத்துக்களை தெளிவாக புரிந்துகொள்ள உதவுகிறது
- அல்குர்ஆன் வசனமொன்று குறிப்பாக யார் தொடர்பாக இறங்கியது என்பது பற்றி மயக்கமின்றி அறிய உதவுகிறது.
- இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தினை விதிப்பதற்கான நியாயங்களை விளங்கிக்கொள்ள துணை செய்கின்றது.
- பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் இஸ்லாமிய ஷரீஆ மக்களின் நலன்களை எந்தளவு கருத்திற்கொண்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.
- ஒரு அல்குர்ஆன் ஆயத்தை இலகுவாக மனதில் பதித்துக்கொள்வதற்கு அவ்வசனம் தொடர்பான நிகழ்ச்சிகள், இறங்கியமைக்கான காரணிகளை அறிந்துகொள்ளல் என்பன துணை செய்கின்றன.

( அஸ்பாபுந் நுஸூல் என்பதைத் தெளிவுபடுத்தியிருப்பின் 4 புள்ளிகளும், அதன் பயன்கள் 4 ஐ விளக்கியிருப்பின் 4 + 6 = 10 புள்ளிகள்)

5. (i) குடும்ப வாழ்வில் கணவன், மனைவிபரஸ்பரம் ஆற்ற வேண்டிய கடமைகளைத் தெளிவுபடுத்துக.
(10 புள்ளிகள்)

(ii) இஸ்லாம் அங்கீகரித்த உணவு வகைகளை உட்கொள்வதால் ஏற்படும் பயன்களைத் தெளிவுபடுத்துக.
(10 புள்ளிகள்)

i. கணவனின் கடமைகள்

- திருமண ஒப்பந்தத்தின் போது கணவன், மனைவிக்குரிய மஹரை ஒப்படைத்தல்.
- மனைவியின் உடற் தேவைகளை நிறைவேற்றல்.
- மனைவியின் தாபரிப்பை மேற்கொள்ளல் (நபகா, கிஸ்வா, ஸகன்)
- மனைவியை இஸ்லாமிய வழியில் வழிநடத்தல்.
- தர்பியா ஆலோசனைகள் வழங்குதல்.
- மனைவியை பாதுகாத்தல்.
- மனைவியின் மீது அன்பும் கருணையும் காட்டுதல்
- மனைவியின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல்.
- மனைவியின் வெறுப்புக்கு ஆளாகாதிருத்தல்.
- மனைவி தனது பெற்றோர், ஏனைய உறவுகளை தரிசிக்கவும், தொடர்புகள் வைத்துக் கொள்ளவும் இடமளித்தல்.
- மார்க்கக் கடமைகளை நிறைவேற்ற உதவியாக இருத்தல்.

மனைவியின் கடமைகள்

- கணவனின் உரிமைகளை பாதுகாத்தல்
- வீட்டு நிர்வாகத்தை மேற்கொள்ளல்
- கணவனுக்கு கட்டுப்பட்டு நடத்தல்
- கற்புப் பேணி வாழுதல்
- கணவனது கோபத்திற்கு உள்ளாகாதிருத்தல்
- கணவனுக்கு விசுவாசமாக நடத்தல்
- கணவனை கண்ணியப்படுத்தல்
- கணவனுக்குக் கவர்ச்சியாக இருத்தல்
- எதனையும் கணவனது அனுமதியுடன் செய்தல்

( இவை போன்ற கணவனின் கடமைகள் ஐந்தும், மனைவியின் கடமைகள் ஐந்தும் தெளிவுபடுத்தப்பட்டிருப்பின் 5 + 5 = 10 புள்ளிகள்)

ii. - **ஆன்மீக வாழ்வு உறுதி பெறும்.**

- **இறைவணக்கமாக மாறி நன்மை கிடைக்கும்.**
- **உள்ளம் பிரகாசம் அடையும்.**
- **வணக்க வழிபாடுகள் அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்படும்.**
- **சுகமான வாழ்வு கிடைக்கும்.**
- **வாழ்வில் அமைதியும் திருப்தியும் ஏற்படும்.**
- **நல்ல செயற்பாடுகள் உருவாகும்.**
- **சமூக வாழ்வில் அமைதி ஏற்படும்.**
- **அறிவு விருத்தியும் உலகப் பற்றின்மையும் உருவாகும்.**
- **மறுமையில் சுவர்க்கம் கிடைக்கும்.**

**(இது போன்ற 5 பயன்கள் தெளிவுபடுத்தப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

6. (i) முஃதஸிலாக்களின் ஐந்து அடிப்படை நம்பிக்கைகளையும் விரிவாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இஸ்லாம் அங்கீகரித்த உணவு வகைகளை உட்கொள்வதால் ஏற்படும் பயன்களைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

i. 1. **தவ்ஹீத்**

- அல்லாஹ்வின் தாத், ஸிபாத் இரண்டும் ஒன்றாகும்.
- இவற்றை பிரித்து நோக்கினால் அல்லாஹ்வின் ஒருமைத் தன்மை நீங்கிவிடும் என்பர்.
- அல்லாஹ்வை எதிர்மறையில் வர்ணிப்பர். உ-ம் : அவன் நீளமானவனுமல்ல, அகலமாகவனுமல்ல.

2. **நீதி**

- மனிதர்களின் அனைத்து செயற்பாடுகளையும் அவர்களாகவே செய்துகொள்கின்றனர்.
- இவர்களின் செயல்களில் அல்லாஹ்வின் நாட்டத்துக்கு எந்தப் பங்கும் கிடையாது.

3. **இரு நிலைகளுக்கு இடைப்பட்ட நிலை**

- பெரும் பாவம் செய்தவன் முஃமின் என அழைக்கத் தகுதியற்றவன்
- அவன் முஃமினுக்கும் காபிருக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பான்
- தவ்பா செய்தால் ஈமானின் பக்கம் மீள்வான். தவ்பா செய்யாத நிலையில் மரணித்தால் நரகில் நிரந்தரமாக தங்குவான்.

4. **வாக்குறுதியும் தண்டனையும்**

- முஃமின் தவ்பா செய்தவனாகவும் கட்டுப்பட்டவனாகவும் உலகை விட்டும் சென்றால் பிரதிபலன்களுக்கும், நன்மைகளுக்கும் உரித்துடையவனாவான்
- தான் செய்த பாவத்துக்கு தவ்பா செய்யாமல் மரணித்தால் அவன் நரகில் நிரந்தரமாக தங்குவான். எனினும் தண்டனை காபிரை விட குறைவானதாக இருக்கும்.
- மறுமையில் பாவிகளுக்கு தண்டனை வழங்கப்படாமல் மன்னிப்பு வழங்கப்படும் என்ற கூற்றானது அல்லாஹ்வுடைய தண்டனையை அர்த்தமற்றதாக்கி விடுகிறது.
- மறுமையில் பாவிகள் ஷபாஅத் மூலம் பயன் பெறுவதை நிராகரிக்கின்றனர்.

5. **நன்மையை ஏவித் தீமையை தடுத்தல்**

- சக்தி இருந்தால் நாவினாலோ, கையினாலோ நன்மையை ஏவித் தீமையை தடுப்பது அனைவர் மீதும் கடமையாகும்.

(இவ்வைந்து விடயங்களும் விரிவாக விளக்கப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)

ii. **மொழி ரீதியாக** : பிரிவு, கூட்டம், ஆதரவு அணி என்ற கருத்துக்களைத் தருகிறது.

**இஸ்லாமிய மரபில்** : அலி (றழி) அவர்களது காலத்தில் எழுந்த அரசியல் ரீதியான கருத்து முரண்பாடுகளின் பின்னணியில் தோன்றியது.

**இஸ்னா அஷரிய்யா**

- இமாம்களின் மொத்த எண்ணிக்கை பன்னிரண்டு என இவர்கள் விசுவாசிப்பதனால், 'இஸ்னா அஷரிய்யா' என அழைக்கப்படுகின்றனர்.
- இமாம்களை மையமாகக் கொண்டு இவர்களது சிந்தனை அமைந்து காணப்படுகின்றமையினால் 'இமாமிய்யா' 'இமாம்களைச் சார்ந்தோர்' எனவும் அழைக்கப்படுகின்றனர்.
- ஷீஆப் பிரிவினரில் பெரும்பாலானவர்கள்
- இமாம்களை அல்லாஹ் நியமிக்கிறான். அவர்கள் நபிமார்களின் பிரதிநிதிகள்
- இமாம்கள் மஃஸூம்கள்
- நபியவர்களின் வாரிசாக அவர்களைத் தொடர்ந்து 12 இமாம்கள் வருவர்
- இமாம்கள் உலுல் அஸ்ம்களை விட மேலானவர்கள் போன்ற சிந்தனைகள் காணப்படுகின்றமை.

**ஸைதிய்யா:**

- ஹுஸைன் (றழி) இன் மகன் அலி அவர்களின் இரண்டாவது மகன் ஸைத் (றஹ்) அவர்களை பின்பற்றியமையால் ஸை தீக்கள் என அழைக்கப்பட்டனர்.
- 'ஸைதிய்யாக்கள்', 'இமாமிய்யாக்களை' விட கொள்கையளவில் சற்று வேறுபட்டவர்கள், நிதானமான, மிதமான சிந்தனைப் போக்குடைய, வரம்பு மீறாத பிரிவினராவர்.
- இவர்களது கருத்துக்கள் பல 'ஸுன்னத் வல் ஜமாஅத்' முஸ்லிம்களின் கருத்துக்களுக்கு உடன்பட்டுக் காணப்படுகின்றன.
- ஸஹாபாக்களை ஏசுவதில்லை.
- நபிமார்களுக்குப் பின் இமாம்கள் மனிதர்களில் சிறந்தோர் என கருதினர்.
- இமாம்களை மஃஸூம்களாக கருதவில்லை. நபிமார்களின் அந்தஸ்துக்கு உயர்த்தவுமில்லை.
- தெய்வீகப் பண்பு கொண்டோராய் கருதவுமில்லை.
- நபியவர்களுக்குப் பிறகு கிலாபத்திற்கு மிகவும் தகுதி பெற்றவர் அலி (றழி) அவர்கள் என்பதே இமாம் ஸைத் அவர்களின் கருத்தாகும். எனினும், முன்னைய கலீபாக்களுக்கு ஏசுவதில்லை.

( ஷீயாக்கள் பற்றி குறிப்பிட்டிருப்பின் 2 புள்ளிகளும், இரண்டு பிரிவுகள் பற்றியும் நான்கு கருத்துக்கள் வீதம் குறிப்பிடப்பட்டிருப்பின் 2 + 4 + 4= 10 புள்ளிகள்)

7. (i) இஸ்லாம் அறிமுகமாவதற்கு முன்னர் இலங்கையருடன் அரேபியர் கொண்டிருந்த தொடர்புகளைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ii) இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைக் கூறும் வரலாற்று ஆய்வாளர்கள் ஐவரைக் குறிப்பிட்டு, அவர்களுள் இருவரின் கருத்துக்களைத் தொகுத்து விபரிக்குக. (10 புள்ளிகள்)

i. - மகாவலி திசைதிருப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு வேலைத்திட்டத்தின் போது கண்டெடுக்கப்பட்ட மாதுரு ஓயாவின் வெள்ள நீர் கட்டுப்பாட்டு வாசல் (ளுடரஉந புயவந) வொஷிங்கடனில் பரிசோதிக்கப்பட்ட போது அது 4000 ஆண்டு பழைமையானது என்றும், இத்தொழில்நுட்பம் எகிப்து, மொசப்பத்தேமியா, வட அரேபியா, ஹழரமௌத் போன்ற பிரதேசங்களில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இப்பிரதேசங்களுடன் காணப்பட்ட உறவின் காரணமாகவே இத்தொழில்நுட்பம் இலங்கைக்கு அறிமுகமானது.

- "பண்டுகாபய மன்னன் கி.மு. 377-307 அநுராதபுர ஆட்சிக்காலத்தில் அநுராதபுரத்தின் மேற்குப்புறம் 'யவன' எனும் வணிகர்ளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது" என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இச்சொல் ஆரம்பத்தில் கிரேக்கர்களைக் குறித்தாலும் பிற்பட்ட காலத்தில் அரேபியர்களையே குறிப்பதாக மகாவம்சத்தை மொழிபெயர்த்த ஆனந்த டப்ளியு. பி. குருகே குறிப்பிடுகிறார்.

- பண்டுகாபய மன்னர் பயன்படுத்திய 'யோனாஸ்' எனும் சொல் அரேபியர்களையே குறிக்கும் என மகாவம்சத்தை மொழி யெயர்த்த டப்ளியு. கைகர் கருதுகிறார்

- வரலாற்றாசிரியர் கலாநிதி சிறிமா கிரிபமுன, கலாநிதி லோனாதேவராஜா ஆகியோர் யோனாஸ் எனும் பதம் அறேபியர்களைக் குறிப்பதாக கருதுகின்றனர். கி.பி. 15 ஆம் நூற்றாண்டு சந்தேச இலக்கியங்கியங்கள் முஸ்லிம் பெண்களைக் குறிக்க 'யொன்லிய' எனும் சொல்லை பயன்படுத்துவது இதற்குச் சான்றாகும் என கலாநிதி லோனாதேவராஜா குறிப்பிடுகிறார்.

- கி.மு. 4ம் நூற்றாண்டிலேயே அறபு வணிகர்கள் தமது குடியிருப்புகளை இலங்கையில் நிறுவியதாக ஜே.ஆர். சின்னத்தம்பி எனும் வரலாற்றாய்வராளர் 'ஊநலடழn ைவழடழஅயல'ள புழடபசயிால' எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

- தெதுருஓயா 'சோனா நதி' என்று அல்லது 'அரேபியரின் நதி' என அழைக்கப்பட்டது. சோணா நதி என்பது சோனகர் நதி என்பதைக் குறிக்கும்

- ஜாஹிலிய்யாக் கால கவிஞரான இம்ரஉல் கைஸின் கவிதைகளில் கற்பூரம், இஞ்சி, கராம்பு போன்ற வாசனைத் திரவியங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இது இலங்கை, கேரளம் முதலிய இடங்களுக்கும், அறபு நாட்டுக்கும் இடையே இருந்த வணிகத் தொடர்புக்கான சான்றாகும்.

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் எழுதப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)

ii. 1. தோமஸ் ஆனல்ட்
2. கலாநிதி ஹமீதுல்லாஹ்
3. கலாநிதி சிறிமா கிரிபமுன
4. ஜேம்ஸ் டென்னன்ட்
5. அல் பலாதுரி
6. இப்னு ஷஹ்ரயார்
7. கலாநிதி லோனா தேவராஜா
8. அறிஞர் சித்திலெப்பை
9. சேர் அலக்ஸான்டர் ஜோன்ஸ்டன்
10. ஜே.ஆர்.சின்னத்தம்பி
11. என். ஜே. கருணாதிலக
12. கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி

**இப்னு ஷஹ்ரயார் மற்றும் கலாநிதி சிறிமா கிரிபமுன**

- கலீபா உமர் (ரழி) அவர்களின் காலப்பகுதியில் மன்னன் (அக்ரபோதி III) ஒரு தூதுவரை அனுப்பியமை.

**தோமஸ் ஆர்னல்ட்**

- கி.பி. 628ஆம் ஆண்டு சீனாவுக்கு வஹப் இப்னு அபீஹப்ஸா (ரழி) நபி (ஸல்) அவர்களின் கடிதத்தை எடுத்துச் செல்லும் வழியில் இலங்கைக்கு வருகை தந்தார்கள்.

**ஜேம்ஸ் டென்னன்ட், அல் பலாதுரி**

- கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய கிலாபத்தில் சிந்துப் பிரதேசம் வெற்றிகொள்ளப்பட்டமைக்கு இலங்கையிலிருந்து அனுப்பப்பட்ட விதவைகள், அநாதைகள் சிறைபிடிக்கப்பட்டமை காரணமாக அமைந்தமை.

**ஜே.ஆர்.சின்னத்தம்பி**

- தெதுரு ஓயாவுக்கு வடபாகத்தில் சோணாள் அல்லது அறேபியப் பழங்குடிகள் வாழ்ந்துள்ளனர். ஐபழயெஉளைவையள என்பது தற்போதைய புத்தளம் பொன்பரப்பினைக் குறிக்கின்றது. இது பெரும்பாலும் அறேபியர் வாழ்ந்த பட்டினமாகும். சோணா நதி என்பதன் பொருள் சோனகர் நதியாகும்.

**வில்ஹெய்ம் கைகர், ஆனந்த குருகே, கலாநிதி சிறிமா கிரிபமுன, கலாநிதி லோனா தேவராஜா**

- பண்டுகாபய மன்னன் காலப் பகுதியில் அநுராதபுரத் தலை நகரில் 'யோனாஸ்' களுக்கு தனிப்பகுதி ஒதுக்கப்பட்டிருந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. இது அரபுவணிகர்களையே குறிக்கிறது.

**தோமஸ் ஆர்னோல்ட்**

- கி.பி. 4ஆம் நூற்றாண்டு இலங்கையில் அரபிகள் செறிவாக வாழ்ந்துள்ளனர்.

**கலாநிதி பாலேந்திரா**

- கடந்த 2000 வருடங்களுக்கும் மேலாக அரபு மக்கள் இலங்கையின் குடிமக்களாக இருந்து வந்ததால் வேடர்களையும் பழங்குடிகளையும் போலவே அவர்களும் பழைமை வாய்ந்தவர்களாவர்.

**சிறிமா கிரிபமுனே.**

- கி.மு. 3, 4 ஆம் நூற்றாண்டுகளில் அரபு தீபகற்பத்திலிருந்து புறப்பட்ட கப்பல்கள் இலங்கையில் தரித்துச் சென்றன.

**சேர் எலக்ஸாண்டர் ஜோன்ஸ்டன்**

- காலித் இப்னு பகாயா என்ற மார்க்க அறிஞரது இலங்கைக்கான வருகையை உறுதிப்படுத்துகின்றார்.

**என். ஜே. கருணாதிலக**

- இலங்கையில் குருநாகலையை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த முஸ்லிம் மன்னனான 'வத்ஹிமி' பற்றிய தகவலை உறுதிப்படுத்துகிறார்.

**கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி**

- கி. பி. 9, 10 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் மாந்தை துறைமுகத்திலும் அதை அண்டிய பிரதேசங்களான திருக்கேதீஸ்வரம், எல்லுப்பிட்டிய, புளியந்தீவு ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட அறபு சிலாசனங்கள் அக்கால முஸ்லிம் குடியிருப்புக்களை உறுதிப்படுத்துகின்றன.
 (வரலாற்றாய்வாளர்கள் ஐவரது பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5 x 1 = 5 புள்ளிகளும் இருவரது கருத்துக்கள் விபரிக்கப்பட்டிருப்பின் 2 x 2 ½ = 5 புள்ளிகளுமாக மொத்தம் 10 புள்ளிகள்)

8. (i) உஸூலுல் ஹதீஸ் (05 புள்ளிகள்)
(ii) மகாஸிதுஷ் ஷரீஆவில் ஹாஜிய்யாத் (05 புள்ளிகள்)
(iii) பிக்ஹ் கலையின் மீள் எழுச்சிக் காலம் (05 புள்ளிகள்)
(iv) நபி (ஸல்) காலத்தில் ஸஹாபாக்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளும் புரிந்துணர்வு (05 புள்ளிகள்)

**i. உஸூலுல் ஹதீஸ்**

- தபஉத்தாபிஈன்கள் காலத்தில் ஹதீஸின் தூய்மையைப் பேணுவதற்காக அக்காலத்து அறிஞர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றொரு பாதுகாப்புக் கலையாக அமைவது உஸூலுல் ஹதீஸாகும்.
- ஹதீஸின் அடிப்படை பற்றி ஆராய்கின்ற கலையாக இதனைக் குறிப்பிடலாம்.
- இக்கலையில் ராவி – அறிவிப்பாளர், முஹத்திஸ் – ஹதீஸ் கலை அறிஞர், தாலிபுல் ஹதீஸ் – ஹதீஸை கற்போர் போன்றோரது தகைமைகள் அடிப்படைகள் பற்றி எடுத்துக் கூறப்படுகின்றது.
- உஸூலுல் ஹதீஸ் கூறுகின்ற நிபந்தனைகளுக்கு, வரையறைகளுக்கு முரணாகின்ற வகையில் உள்ள எந்த ஹதீஸும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகைகளிலும் அடங்கமாட்டாது.
- ஆகவே இக்கலை அறிவிப்பாளர்களையும், முஹத்திஸீன்களையும் ஹதீஸைக் கற்கின்ற மாணவர்களையும் சரியான முறையில் இனங்காட்டித் தூய்மையான ஹதீஸ்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை முஸ்லிம் உம்மத்தினருக்கு தருகின்றது.

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5 x 1 = 5 புள்ளிகள்)

**ii. ஹாஜிய்யாத்: (தேவை நிலை)**

- மகாஸிதுஷ் ஷரீஆவின் வகைப்படுத்தலில் ஹாஜிய்யாத் என்பதும் ஒரு படிநிலையாகும்
- இது அத்தியவசிய தேவை நிலைக்கு அடுத்துள்ள படிநிலையாகும்.
- மனிதர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள், அசௌகரியங்களை நீக்குவதை வேண்டி நிற்பதே ஹாஜிய்யாத் நிலையாகும்.
- இப்பிரிவைச் சார்ந்த நலன்கள் ழரூரிய்யத்தை விட படித்தரத்தில் குறைந்தவை.
- இவை இல்லாவிடின் வாழ்க்கை ஒழுங்கு சீர்குலையாது, சமூகத்தின் இழப்புக்கு அச்சுறுத்தலாகவும் அமையாது, எனினும், வாழ்வின் நெருக்கடிகளையும், கஷ்டங்களையும் எதிர்கொள்ள நேரிடும்.
- இந்த நலன்கள் மனிதர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்குவதாகவே அமையும்.
- மனிதனுக்கு ஏற்படும் கஷ்டங்ளையும் நெருக்கடிகளையும் நீக்கி, சௌகரியத்தையும் வசதிவாய்ப்பையும் ஏற்படுத்தும் விதமாக இஸ்லாம் சட்டங்களில் சலுகைகள் தந்திருப்பதை நோக்கலாம்.

உதாரணமாக :
- நோயாளி, பிரயாணி ஆகியோர் ரமழான் நோன்பு நோற்பதிலிருந்து விதிவிலக்குப் பெற்றுள்ளமை
- பிரயாணி நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டாக நிறைவேற்ற சலுகை வழங்கப்பட்டுள்ளமை,
- நீரில்லாத போது தயம்மம் செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- "அல்லாஹ் உங்கள் மீது எந்தவொரு அசௌகரியத்தையும் ஏற்படுத்த விரும்பவில்லை" (5 : 6)
- "அல்லாஹ் உங்களுக்கு இலகுவையே நாடுகின்றான், மேலும் அவன் உங்களுக்கு சிரமத்தை நாடவில்லை" (2 : 185)
- "நபியவர்களுக்கு முன் இரண்டு விடயங்கள் முன்வைக்கப்பட்டால், பாவம் இல்லாவிடில் அவற்றில் மிக இலகுவானதையே அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள்" – ஹதீஸ் –

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5 x 1 = 5 புள்ளிகள்)


Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

iii. **பிக்ஹு'க் கலையின் மீளெழுச்சிக் காலம்**

- பிக்ஹு'க் கலையின் மீளெழுச்சிக் காலம் உஸ்மானிய ஆட்சிக் காலமே என அதிகமான அறிஞர்கள் கருதுகின்றமை
- உஸ்மானிய சாம்ராஜ்யத்தில் உருவாக்கப்பட்ட பிரதேச நீதிமன்றங்களுக்கு தீர்ப்புகளுக்கு அடிப்படையாகக் கொள்ளக்கூடிய சட்டக் கோவை ஒன்று அவசியப்பட்டமை.
- ஹி 1293 இல் "மஜல்லதுல் அஹ்காம் அல் அத்லிய்யா" என்ற சட்ட நூல் உருவாக்கப்பட்டது. இது நவீன சட்டப்பாணியில் காணப்பட்டமை
- 1924 ஆம் ஆண்டு கிலாபத் வீழ்ச்சியோடு இரண்டுவிதமான குழுவினர் தோற்றம் பெற்றமை.
- முஸ்லிம் சமூகத்தின் பின்னடைவிற்குக் காரணம் பழைமை போற்றும் பண்பே என்றும், ஐரோப்பிய முறையிலான வாழ்க்கையே முன்னேற்றத்திற்கான வழி என்றும் கருதியமை
- முஸ்லிம் சமூகத்தின் பின்னடைவிற்குக் இஸ்லாமிய வாழ்க்கை முறையோ, இஸ்லாமிய சட்டங்களோ காரணமல்ல என்றும் அல்குர்ஆன், ஸுன்னா என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு காலத்தின் தேவைக்கேற்ற புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கருத்து வெளிப்பட்டது.
- இரண்டாவது சிந்தனைப்பிரிவைக் கொண்டர்களது சிந்தனையின் விளைவால் பல நாடுகளில் முஸ்லிம் தனியார் சட்டங்கள் தோற்றம் பெற்றமை
- எகிப்து, சிரியா, ஜோர்தான், துருக்கி போன்ற நாடுகளில் ( 1920 - 1955 ) இடம்பெற்ற பிக்ஹு' சட்டங்களை நவீன காலத்திற்கு ஏற்ற மாற்றம் என்பது புலனாகின்றமை.

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5 x 1 = 5 புள்ளிகள்)

iv. **நபி (ஸல்) காலத்தில் ஸஹாபாக்களிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடுகளும் புரிந்துணர்வும்**

- கருத்து வேறுபாடுகள் இயல்பானது. அதனை சில அறிஞர்கள் அருள் என்ற கருத்தை கூறுகின்றனர்.
- ஸஹாபாக்கள் மத்தியிலும் கருத்து வேறுபாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.
- கருத்து வேறுபாடுகளின் போது ஸஹாபாக்கள் புரிந்துணர்வுடன் செயலாற்றியமை. அதற்கு உதாரணங்களாக,
- உமர் (ரழி) , அலி (ரழி), இப்னு மஸ்ஊத் (ரழி) அபூ மூஸா அல் அஷ்அரி (ரழி) முஜாஹித், கதாதா, இக்ரிமா போன்றோர் 'குர்உ' தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாடு
- பனூ குறைழாக்களிடம் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களை அனுப்பியது தொடர்பான சம்பவம்
- இரு ஸஹாபாக்கள் பிரயாணத்தின் போது தொழுகையை தயம்மும் செய்து நிறைவேற்றிய சம்பவம்.
- பிரயாணத்தின் போது ஸஹாபாக்கள் நோன்பு நோற்றது மற்றும் விட்டதுமான சம்பவம்.
- பத்ர் கைதிகள் விவகாரத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5 x 1 = 5 புள்ளிகள்)

(மொத்தம் 4 x 5 = 20 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

(29) WWW.PastPapers.WiKi (29)

LOL.LK Learn Ordinary Level

All | Search Books Here... | Search

Hotline 071 777 4440 | 0 | Log in Register

Shop By Grade | Home | Shop | Contact Us | Track Your Order | Checkout




2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු 1,200.00
or 3 X රු 400.00 with KOKO




2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු 500.00
or 3 X රු 166.67 with KOKO




2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු 1,100.00
or 3 X රු 366.67 with KOKO




2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු 600.00
or 3 X රු 200.00 with KOKO




2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු 750.00
or 3 X රු 250.00 with KOKO




2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු 1,050.00
or 3 X රු 350.00 with KOKO

**Free Delivery**
For all orders over 10000LKR

**Secure Payment**
100% secure payment

**24X7 Support**
Quick Support

**03 Days Return**
Call for Help 071 777 4440

Terms and Conditions | Refund Policy | Privacy Policy
**LOL STORE PVT LTD** Copyright ©2023

We Using Safe Payment For

Easy Monthly Installments | KOKO | CASH ON DELIVERY | VISA